# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC.4/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | அ.சா.2 |
| Name | : | அருள்மொழி |
| Father's/Husband Name: | | முத்துகுமார் |
| Village | : | பிள்ளையார்பாளையம் |
| Taluk | : | வேப்பந்தட்டை |
| Age | : | 32 /2023 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 21.12.2023.

**(1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. P. தேன்மொழி, உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் A1– பழனிசாமி, A2–ரெங்கராஜ், A3–செல்லதுரை ஆஜர்)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் வீட்டுக்குடித்தனமாக இருந்து வருகிறேன். அ.சா.1–கந்தசாமி எனது மாமனார் ஆவார். ஆஜர் எதிரிகள் மூவரையும் எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகள் எனது பக்கத்து காட்டுக்காரர்கள் ஆவார்கள். 17.01.2022 ம் தேதி மாலை 4.30 மணியளவில் எனது மாமனார் சம்பவ இடமான எனது மாமனாருக்கு சொந்தமான பிள்ளையார்பாளையத்தில் உள்ள அவரது வயலில் இருந்தார். நான் பக்கத்து வயலில் இருந்தேன். அப்போது 1 ம் எதிரி பழனிசாமி எனது மாமனாரிடம் வந்து தகாத வார்த்தை பேசி பிரச்சனை செய்தார். அதனால் தகராறு ஏற்பட்டது. அதில் 1 ம் எதிரி பழனிசாமி எனது மாமனார் கந்தசாமியை கீழே தள்ளிவிட்டார். சத்தம் கேட்டு நான் அங்கே போனேன். எனது மாமனார் கந்தசாமியை கீழே தள்ளி 1 ம் எதிரி பழனிசாமி மேலே உட்கார்ந்து கொண்டு அவரை

நெஞ்சு, கன்னம், இடதுபுற கண் ஆகியவற்றில் கையால் அடித்தார். சேற்றில் கீழே தள்ளியிருந்தார். அதில் எனது மாமனாருக்கு இடது கண் வீங்கி விட்டது.

(ii) இடது காதில் சேர் புகுந்துவிட்டதால் காது கேட்காமல் மந்தம் ஏற்பட்டது. இடது அல்லையில் எதிரி அடித்ததில் அவருக்கு விலா எலும்புகள் விரிசல் விட்டு இருந்தன. கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்தன. மற்ற எதிரிகள் அடி, கொள் என்று கூறி சண்டையை தூண்டிவிட்டனர். நானும் பக்கத்து காட்டுக்காரரான லதாவும் சண்டையை மறித்து எனது மாமனாரை இருசக்கர வாகனத்தில் பெரம்பலூர் GH க்கு கொண்டு சென்றோம். போலிசார் என்னை விசாரித்தனர். இது சம்மந்தமாக எனது மாமனார் புகார் கொடுத்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2(i) எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய போதுமான வாய்ப்பு அளிக்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை இல்லை. சாட்சியம் முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை